15

# புத்திமதிகள்

## (4:2-6)

*தனிப்பட்ட கிறிஸ்தவ நடத்தைகளைப் பற்றி பவுல் எழுதிய பின்பு (3:5-17), சபையிலுள்ள பல்வேறு கூட்ட மக்களுக்கு அவர் போதனைகளைக் கொடுத்தார் (3:18-4:1). அடுத்து, முழு கொலோசெ பட்டணத்துச் சபைக்கும் எழுதினார். அவருடைய முடிவுரைக் குறிப்பிலிருந்து இரண்டு பாடங்களைப் பெறக்கூடும்: கிறிஸ்தவர்கள் நேர்மறைச் செயல்களான ஜெபம் போன்றவற்றை கைக்கொள்ள வேண்டியவர்கள் (4:2-4). மேலும் கிறிஸ்துவுக்கென்று விசேஷித்த ஊழியங்களில் ஈடுபடவேண்டும், (ஆத்துமாவை) இழந்து போனவர்களை அவரிடம் நடத்த வேண்டும் (4:5, 6).*

## *விசேஷமாக பவுலுக்காக ஜெபியுங்கள் (4:2-4)*

**2இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். 3கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, 4திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.**

**"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (4:2)**

பவுலின் அநேக நிருபங்களின் முடிவுக்கு அருகில் அவர் தம் வாசகர்களை ஜெபத்திற்கு நேரத்தை செலவிடும்படி உற்சாகப்படுத்துகிறார்,[1] பெரும்பாலும் தனக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.[2] கொலோசெயர்களுக்கு, அவர் சொல்லுகையில், **இடைவிடாமல்** [*proskartereō*] **ஜெபம் பண்ணுங்கள்.** *proskartereō* என்பது ஜெபத்தில் தொடர்ந்து இருப்பதோடு சம்பந்தப்பட்டது (நடபடிகள் 1:14; 2:42; 6:4; ரோமர் 12:12) அல்லது வேறு காரியங்களில் ஈடுபடுவது ஆகியவற்றைக் குறிக்கும் (காண்க மாற்கு 3:9; நடபடிகள் 2:46; 8:13; 10:7; ரோமர் 13:6). இயேசு தம்மைப் பின்பற்றுவோர் விட்டுவிடாமல் அல்லது சோர்ந்து போகாமல் ஜெபிக்கும்படி போதித்தார் (லூக்கா 11:5-13; 18:1-8).

ஜெபம் எனும் வார்த்தை (*proseuchē*) நன்றி செலுத்துதலைக் காட்டிலும் அதிகமாக விண்ணப்பம் செய்தலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மாற்கு 9:29; 12:5; ரோமர் 1:10; 15:30; யாக்கோபு 5:17). கொலோசெயிலிருந்து கிறிஸ்தவர்கள் ஜெபித்து, தேவனிடத்தில் அவருக்காகவும் அவரோடிருப்பவர்களுக்காகவும் விண்ணப்பிக்கும்படியாகவும் கேட்கப்பட்டார்கள். மற்ற நிருபங்களில், தனது சார்பாக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டபின் அதை தொடர்ந்து செய்யும்படி வேண்டினார் (எபேசியர் 6:18-

*20; 1 தெசலோனிக்கேயர் 5:17, 25).* அவர் ஒரு வருக்கொருவர் ஜெபிப்பதை மிக முக்கியமானதாகக் கருதினார், ஏனெனில் அவர் மற்றவர்களுக்காக தொடர்ந்து ஜெபித்தார், அதேபோல அவர்களும் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

**"ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (4:2)**

கொலோசெயர்கள் விழித்திருந்து *(grēgoreō)* **எச்சரிக்கையாயிருக்கும்படி** சொல்லப்பட்டார்கள். இயேசு தமது வருகைக்கு ஆயத்தமாக இருக்கும்படிக்கு விழித்திருங்கள் என்று சொன்னார் (மத்தேயு 24:42; 25:13; லூக்கா 12:37, 39). சகோதரர்கள் சோதனையால் அல்லது தீமையினால் மேற்கொள்ளப்படுவதை பவுல் விரும்பவில்லை 1 கொரிந்தியர் 16:13; 1 தெசலோனிக்கேயர் 5:6) அல்லது கள்ளப்போதகர்களால் தவறாக நடத்தப்படவும் விரும்பவில்லை (நடபடிகள் 20:31).[3] கெத்சமனே தோட்டத்தில் பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானுக்கு இயேசு போதித்தார் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ..." என்றார் (மத்தேயு 26:41).

விழித்திருந்து என்று சொல்லப்படுவது தொடர் ஆபத்தைச் சுட்டிக் காட்டுகிறது. சுறுசுறுப்பாய் இயங்கும் எதிராளியும் நமக்கு எதிராளியாயிருப்பவனுமாகிய பிசாசானவன், தனக்கென்று பொய்யையும் மோசம் போக்கும் வழிகளையும் கொண்டிருக்கிறான் (யோவான் 8:44; 2 கொரிந்தியர் 2:11; 11:3). கிறிஸ்தவர்கள் தொடர்ந்து விழித்திருக்க வேண்டும், ஏனெனில் அவன் கொடிய சோதனைகளைக் கொடுத்து ஆவிக்குரிய, ஒழுக்க, உபதேசம், சரீரப்பிரகாரமான, சமுதாய ரீதியில், பொழுதுபோக்கு மற்றும் பொருளாதார ரீதியில் செயல்படுகிறான். எந்த நேரத்திலும் நமது பாதுகாப்பையோ அவனுக்கு எதிரான போராட்டத்தில் கவனத்தையோ இழந்து விடக்கூடாது. தேவன் கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய போராயுதங்களை பாதுகாப்புக்காக கொடுத்திருக்கிறார், ஆகிலும் நாம் அந்த போராயுதங்களைத் தரித்து யுத்தத்திற்கு பலப்படுத்திக் கொள்ளவும், விழித்தி ருந்து ஜெபிக்கவும் வேண்டும் (எபேசியர் 6:10-18).

பவுல் தொடர்ந்து விழித்திருக்க வேண்டும் என்று சொன்னபோது *(en autē),* அவர் ஜெபத்தைக் குறிப்பிட்டார். கொலோசெயர்கள் விழித்திருப்பதற்கு ஏதுவான வழி இடைவிடாமல் ஜெபத்தில் தரித்திருப்பதுதான், அதற்கு முரணானது உலகத்தாரைப் போல் வாழ்வது, அது தூங்க வைக்கும் தாலாட்டாக பிசாசினால் மேற்கொள்ளப்படுவதுமாகும்.

இந்த புத்திமதி கொலோசெயரில் பவுல் நன்றியறிதலையும், ஸ்தோத்திரங்களையும், ஸ்தோத்திரஞ் செலுத்துதலையும் குறிப்பிடுவது இது ஏழாவது முறை (காண்க 1:3, 12; 2:7; 3:15, 16, 17). அவர் அடிக்கடி **ஸ்தோத்திரஞ்செலுத்தும் எண்ணத்தை** ஜெபத்துடன் செலுத்துவதில் சம்பந்தப்படுத்தியிருந்தார்.[4]

**"கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக்குறித்து பேச வேண்டிய பிரகாரமாய்ப்பேசி" (4:3)**

பவுல் 1:26, 27ல் சொல்லப்பட்டபடியே ஒரு **இரகசியத்தைக்** *(mustērion),* குறித்துப் பேசினார் பழைய ஏற்பாட்டில் **கிறிஸ்துவைக்** குறித்த

*இரகசியம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது, ஆனால் புதிய ஏற்பாட்டில் அந்த இரகசியம் வெளியாக்கப்பட்டது (ரோமர் 16:25, 26; எபேசியர் 3:3-5; 1:26ல் சொல்லப்பட்டுள்ள விவாதத்தைக் காண்க). பவுலின் குறிக்கோளெல்லாம், "தைரியமாய் சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிப்பதுதான்" (எபேசியர் 6:20).*

*கிறிஸ்துவின் இரகசியத்தை அவர் பிரசங்கித்ததால், பவுல்* ***சிறைவைக்கப்பட்டார்.*** *"சிறைவைக்கப்படுவதற்கு" பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை, இதன் நேரடிப் பொருள் கட்டப்பட்டிருத்தல்.[5] "தேவ வசனமோ கட்டப்பட்டிருக்க வில்லை" என்று எழுதியபோது பவுல் அதைப் பயன்படுத்தினார் (2 தீமோத்தேயு 2:9). மேலும் அவர் விவாகமான ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குங்காலம் வரை நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைகளுக்குக் "கட்டப்பட்டிருக்கிறாள்" என்று சொன்ன போதும் அதைத் தான் குறிப்பிட்டார் (ரோமர் 7:2; 1 கொரிந்தியர் 7:27, 39).*

*கொலோசெயரில் மற்ற இடங்களில், பவுல் தனது பாடுகளை கட்டப்பட்டதற்கு ஒப்பிட்டுப் பேசினார் (1:24; 4:7-9). அவர் தாம் சிறைவைக்கப்பட்டதை அல்லது "கட்டப்பட்டிருந்ததை" (desmos) பிலிப்பியர் 1:7, 13, 14, 17; கொலோசெயர் 4:18; 2 தீமோத்தேயு 2:9; மற்றும் பிலேமோன் 10, 13 ஆகிய வசனங்களில் பேசினார்.*

*ரோமாபுரிக்கு அவர் வந்த போது, பவுல் குறைந்த பட்சம் இரண்டு வருடங்கள் அங்கே "தன்னைக் காத்திருக்கும் சேவகருடனே தனித்துக் குடியிருக்கும்படி" அனுமதிக்கப்பட்டார் (நடபடிகள் 28:16). அவர் கட்டப்பட்டிருந்தபோதிலும் (எபேசியர் 6:20) சேவகர்களால் காவலில் வைக்கப்பட்டிருந்த போதிலும், அவர் தனது சொந்த வாடகை வீட்டில் தங்கியிருந்தார். ஜனங்கள் சுதந்தரமாக அவரைப் போய் பார்த்து வர ஏதுவிருந்தது (நடபடிகள் 28:30, 31). பவுல் இந்த வசனத்தில் "நாங்கள்" என்பதற்குப் பதிலாக "நான்" என்று மாற்றிக்கொண்டார். இதன் நோக்கம் தனது நிலை மற்றவர்களிலிருந்து வித்தியாசப்பட்டிருப்பதை குறிப்பிடும்படியாகத்தான்.* Peter T. O'Brien *"ஒருமைக்கு மாற்றிப் பேசுவது இயல்பானதுதான், தனக்கும் மற்றவர்களுக்கும் பொதுவான காரியத்திலிருந்து தனக்கு மாத்திரமே உரியதுக்கு மாறினதைக் குறிப்பிட்டார் ..." என்றார்.[6]*

*இந்த நேரத்தில் பவுல் யூதர்களுடைய கைகளில் விழுவதைக் காட்டிலும் இராயனால் விசாரிக்கப்படும் படிக்கு காவலில் வைக்கப்பட்டு சிறையில் காத்திருப்பது நலமென்று எண்ணி ரோமாபுரியில் (வீட்டுக்) காவலில் வைக்கப்பட்டிருந்தார், யூதர்கள் அவரை கொலை செய்யும்படி வகை தேடினார்கள் (நடபடிகள் 25:1-3). ரோமர் அரசின் பாதுகாப்புக்குக் கீழ் தான் இருக்கும்படிக்கு அவர் இராயனுக்கு அபயமிட்டார் (நடபடிகள் 25:8-12). அவர் அபயமிட்டபின், கட்டப்பட்டவராய், ரோமிற்கு அனுப்பப்பட்டார். ஒரு ரோமக்குடிமகன் என்ற அடிப்படையில் அவருக்கு அந்த உரிமையிருந்தது.*

### *"நான் பேச வேண்டிய பிரகாரமாய் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு" (4:3)*

*கொலோசெயர்கள் தங்கள் ஜெபங்களில் இரண்டு விண்ணப்பங்களைத் தங்களுக்காக ஏறெடுக்கும்படி பவுல் அவர்களைக் கேட்டுக் கொண்டார்: வசனத்தைப் பேசுவதற்கு தனக்கு சந்தர்ப்பங்கள் உண்டாகும்படியாகவும்*

அதைத் துரிதமாகவும் புரிந்துகொள்ளத் தக்க வகையில் செய்யும்படியும் ஜெபிக்கச் சொன்னார். அவர்கள் தனது செய்தியை தைரியமாய் பிரசங்கிக்கவும், கிருபை பொருந்தினதாயும், ஞானத்தோடும் பிரசங்கிக்க ஏதுவாக ஜெபிக்கச் சொன்னார். அவர் தானோ தன்னுடைய சக ஊழியர்களோ தனிப்பட்ட முறையில் ஆசீர்வாதங்களைப் பெறத்தக்க வகையில் ஜெபிக்கச் சொல்லவில்லை; மாறாக, அவருடைய அக்கறையெல்லாம் அவர்கள் தனது பிரசங்கத்தை புரிந்துகொள்ளத்தக்க வகையில் பிரசங்கிக்க ஏதுவாக ஜெபிக்கச் சொன்னார்.

அதை **வெளிப்படுத்துவதற்கு,** என்பது கிரேக்க மொழியில் ஒரே வார்த்தையாக உள்ளது, அது (*phaneroō*). 3:4ல் "வெளிப்படுதல்" என்பது 1:25ல் "வெளியாக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கேட்பவர்கள் புரிந்து கொள்ளவும் செயல்படவும் தேவன் ஏவும்படி ஜெபிக்க பவுல் குறிப்பிடவில்லை, அவருக்குத் தனக்கென கடமையிருந்தது, அவர்களுக்கெனவும் கடமையிருந்தது. தனது செய்தியைக் கேட்பவர்களுக்கு முன்பாக சாதுரியமாகவோ அல்லது வசனிப்புடனோ பேசி மனதில் எழுச்சி உண்டாக்க வகை தேடுவதற்குப் பதிலாக, அவர் தம் பேச்சு தெளிவானதாயும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாகவும் இருப்பதை விரும்பினார். அவர் மனவெழுச்சியை ஏற்படுத்துவதக்குப் பதிலாக தகவல் அறிவிக்கவே விரும்பினார் (காண்க 1 கொரிந்தியர் 2:1).

அப்போஸ்தலன் **பேச வேண்டிய பிரகாரமாய்** [*dei*] **பேச** விரும்பினார், இந்த வாக்கியம் அவசியம், கடமை, பொறுப்பு, மற்றும் மாற்றமற்ற தேவைகளை உள்ளடக்கியது. *Dei* என்பது பெரும்பாலும் "கட்டாயம்" என்னும் பொருளில் தான் மொழிபெயர்க்கப்பட்டது. (காண்க மத்தேயு 23:23; 24:6; லூக்கா 2:49; 9:22; யோவான் 4:24; 12:34; நடபடிகள் 4:12; 9:6.)

இரட்சிக்கும் பெலன் செய்தியிலிருக்கிறது (நடபடிகள் 11:14; ரோமர் 1:16) செய்தி அளிப்பவரிடம் அல்ல. இருந்தும், செய்தி அளிப்பவரின் பேச்சும் ஜீவியமும் செய்தியை பாதிக்காதபடி நடந்து கொள்ள வேண்டும். அன்போடும் சரியாயும் பிரசங்கிக்கிப்படும் - சத்தியம் - தேவன் இழந்து போனவர்களை இரட்சிக்க தெரிந்து கொண்ட பொருள்.

### "திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்" (4:4)

**வேண்டிக் கொள்ளுதல்** என்பது நிகழ்காலத்தில் பேசப்படுகிறது, பவுல் தனக்காகவும் தன்னோடு இருப்பவர்களுக்காவும் தொடர்ந்து ஜெபத்தை ஏறெடுக்கும்படி விரும்பினார். **"எங்களுக்காக"** எனும் வார்த்தையை ஒருவேளை அவர் பதிப்பு செய்யும் முறையில் "எனக்காக" என்ற வார்த்தைக்குப் பதிலாகப் பயன்படுத்தியிருக்கலாம். ஏனெனில் அவர் தொடர்ந்து சகோதரர்கள் "நாங்கள் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி" (வசனம் 3) அதை "நான் வெளிப்படுத்துவதற்கு" (வசனம் 3) தொடர்ந்து ஜெபிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். தன்னோடிருக்கிறவர்களையும் சேர்த்து பவுல் குறிப்பிட்டிருக்கலாம், ஏனெனில் அவர்களும் போதித்திருக்கக் கூடும். அப்படியிருந்திருக்குமானால், அவர் வசனம் 3ன் முன்பகுதியில் தன்னை மட்டும் குறிப்பிட்டு தனக்காக கேட்டிருக்கக் கூடும், பின்பு எங்களுக்காகவும்

*என்று அவர்களை சேர்த்துக் கொண்டு பேசினார்.*

*பவுல் பொதுவாக ஜெபிக்கும்படி கொலோசெயர்களிடம் கேட்டது மாத்திரமல்ல, ஜெபிப்பதற்கான காரியங்களை குறிப்பிட்டு அவைகளுக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டார். தன்னை காவலிலிருந்து விடுவிக்கும்படி அவர் ஜெபிக்கச் சொல்லவில்லை, மாறாக* **தேவன் ... திருவசனம் செல்லும்படியான ... வாசலைத் திறக்கும்படியாகவும் ...** *ஜெபிக்கச் சொன்னார், இந்த உருவகத்தை அவர்வேறே வசனப் பகுதிகளிலும் பயன்படுத்தியிருக்கிறார் (1 கொரிந்தியர் 16:9; 2 கொரிந்தியர் 2:12). "திறந்த வாசலுக்காக" அவர் வேண்டிக் கொள்ளச் சொன்னது வசனத்தைப் பிரசங்கிக்க ஏதுவான சந்தர்ப்பம் கிடைக்கும்படிக்கு வேண்டிக் கொள்ளச் சொன்னார் என்று பொருள். அது ஒரு வீட்டுச் சொந்தக்காரர் தனது வீட்டிற்குள் ஒரு பார்வையாளரை (விருந்தினரை) கதவைத் திறந்து வரவேற்பது போன்றது. யூதர்களும் புறஜாதிகளும்கூட அநேக இடங்களில் பவுல் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளச் சென்றபோது அவரது சுவிசேஷப் பயண நேரங்களில் கதவை அறைந்து சாத்தியிருக்கின்றனர் (நடபடிகள் 13:50; 14:5, 6; 17:10; 13; 1 தெசலோனிக்கேயர் 2:14-16). எப்படியிருப்பினும், அந்த ஜனங்கள் பவுலிடத்தில் வந்து காவலில் அவர் இருக்கையில் அவரிடம், "மிகுந்த தைரியத்துடன் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்ததைக் கேட்டார்கள்" (நடபடிகள் 28:30, 31). பவுல் பிலிப்பியர்களுக்கு எழுதியதாவது,*

> *சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன், அரண்மனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி, சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள் (பிலிப்பியர் 1:12-14).*

*அவர் தன் அநுகூலமின்மையிலும் அநுகூலத்தைக் கண்டார். பவுல் தன்னை ஒரு சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாக எண்ணிக் கொண்டார் (எபேசியர் 6:19).*

*பவுலின் சிறை நிருபங்கள் உலகத்தில் ஒரு பலமான விளைவை ஏற்படுத்தியிருந்தன. அவர் எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், மற்றும் பிலேமோன் ஆகிய நிருபங்களை தனது முதல் முறை காவலின் போதும் 2 தீமோத்தேயு புத்தகத்தை இரண்டாவது முறை காவலில் வைக்கப்பட்டிருந்த போதும் எழுதினார், நூற்றாண்டுகளினூடே, பவுல் இந்த நிருபங்கள் வாயிலாக கிறிஸ்துவின் மார்க்கத்தை அறிவுறுத்தத் தொடர்ந்தார்.*

*அடுத்ததாக பவுல்* **திருவசனத்தைக்** *குறிப்பிட்டார் (logos). (இது வார்த்தை என்றும் பொருள்படும்.) ஒரு செய்தியை வெளிப்படுத்துவதற்கு வார்த்தை ஒரு வாகனம் போன்றது அதன் மூலமாகவே வெளிப்படுத்தப்படும், "வார்த்தை" தன்னகத்தே கொண்டுள்ள செய்தி அவிசுவாசிகளும் கேட்கத் தக்கதாக சென்றடையும். இழந்துபோனவர்களிடம் பேசத்தக்க ஒரு இடம் உண்டாயிருப்பதை பவுல் விரும்பினார். அவர் போவதற்கு சங்கிலிகள்*

*தடையாயிருந்தபடியால் அவருடைய செய்தியைக் கேட்பதற்கு ஜனங்கள் அவரிடத்தில் வர வேண்டியதாயிருந்தது.*

*தேவனுடைய வசனம் பின்வரும் கண்ணோட்டத்தில், முக்கியத்துவம் வாய்ந்தது:*

- *அது ஜீவனைக் கொடுக்கிறதும் வல்லமையுள்ளதுமாகும் (யோவான் 6:63; எபிரெயர் 4:12).*
- *பாவத்திலிருந்து விடுதலையளிக்க அதுவே மூலக் காரணியானது (யோவான் 8:32).*
- *அது பரிசுத்தமாக்கப்பட ஏதுவான அடிப்படை (யோவான் 17:17).*
- *அது இரட்சிப்பைக் கொண்டு வருகிறது (நடபடிகள் 11:14)*
- *அது விசுவாசத்தின் மூலக்கரு (ரோமர் 10:17).*
- *அது ஆத்துமாவை சுத்திகரிக்கிறது (1 பேதுரு 1:22)*
- *அது புதிய பிறப்பைக்கொடுக்கிறது (1 பேதுரு 1:23).*

*அவருடைய வசனத்தைக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிகிறவர்களே ஆசீர்வாதம் பெறுவார்கள். வசனம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், சரியாகக் கையாளப்பட வேண்டும், பிரசங்கிக்கப்பட வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 2:13; 2 தீமோத்தேயு 2:15; 4:2).*

*வசனத்தைப் பிரசங்கிக்க ஏதுவான வாசலை தேவன் மட்டுமே திறக்க முடியும், ஆனால் அவரது செய்தியாளர்கள் அதிலே பிரவேசித்து பிரசித்தப்படுத்த வேண்டும். தேவன் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் (நடபடிகள் 14:27); ஆகிலும், பவுலும் பர்னபாவும் அவருடைய முகவர்களாக இருந்து இரட்சிப்பின் செய்தியை அதிலே பிரவேசித்துக் கூறினார்கள். பேசுவதற்கான சந்தர்ப்பம் என்பது பேசப்படும் செய்தி ஏற்றுக்கொள்ளப்படும் என்று பொருள் அல்ல, ஏனெனில் கேள்விப்படுகிறவர்கள் வசனத்தை ஏற்றுக் கொள்ள பொறுப்பைக் கொண்டிருக்கின்றனர் (நடபடிகள் 2:41; 11:1; யாக்கோபு 1:21). பவுல் தங்களுக்குப் பிரசங்கித்தவைகளை அநேகர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் (காண்க நடபடிகள் 13:46).*

## புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து கொள்ளுதல் (4:5, 6)

***5** புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். **6** அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.***

*கிறிஸ்தவ வாழ்க்கை தேவனோடு கிடைக்கிற உறவுமுறையிலும் சபைக்குள் கிடைக்கப்பெறுகிற உறவுமுறையாலும் மாத்திரம் முக்கியத்துவம் பெற்றதல்ல, மாறாக உலகத்துக்கு முன்பாக வாழுகிற முன்மாதிரியினாலும் கூட இது*

முக்கியத்துவம் வாய்ந்தது. புறம்பானவர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நான்கு வழிமுறைகளை பவுல் கொடுத்திருக்கிறார்.

**"புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து" (4:5)**

புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் **நடந்து** *(peripateite)* என்பதன் நேரடிப்பொருள் "நடந்து" முன்னிலையில் கண்டிப்பாகச் சொல்வது (4:5; மத்தேயு 4:18; 9:5; 1 யோவான் 1:6). *Peripateō* என்பது ஒருவருடைய நடத்தையையும் அவருடைய வாழ்க்கைமுறையையும், அல்லது செயல்களையும் கூட பொருள்படுத்தும் (மாற்கு 7:5; யோவான் 8:12; 11:9, 10; 12:35). இதன் வினைச் சொல் பவுல் எழுதியதற்கு அப்பால் ஒரு பொருளையுடையது, அது "அலைப்புண்டு திரிதலை" (எபிரெயர் 13:9) அல்லது "சுற்றித்திரிதலை" (1 பேதுரு 5:8) உட்படுத்தியது. *Peripateō* என்னும் வார்த்தையை பவுல் மாம்ச ரீதியிலான நடத்தையைக் குறிப்பிடப் பயன்படுத்தவில்லை, மாறாக ஒருவரின் ஒழுக்கத்தை உருவகப்படுத்தியே எழுதுகிறார் (கொலோசெயர் 1:10; 2:6; 3:7; 4:5).

**புறம்பேயிருக்கிறவர்களுக்கு** அல்லது அவிசுவாசிகளுக்கு முன்பாக **ஞானமாய்** [*sophia*] நடந்து கொள்வதன் விளைவுகளைக் குறித்து பவுல் அதிக விளக்கத்திற்குள் போகவில்லை. மற்ற நிருபங்களில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாகவோ அல்லது அவருடைய சரீரத்திற்குப் புறம்பாக இருக்கிறவர்களுக்குள்ளாகவோ அவர்களின் மனதைப் புண்படுத்தக் கூடாதவர்களாய் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை பவுல் விவாதித்தார் (ரோமர் 14:1-21; 1 கொரிந்தியர் 8:8-13; 9:19-23; 10:31-33). "புறம்பேயிருக்கிறவர்கள்" என்று பவுல் குறிப்பிடுவது நேரடிப் பொருளில் "புறம்பாக இருக்கிற (நபர்கள்)" கிறிஸ்துவின் சரீரத்திற்கு வெளியே இருப்பவர்கள் எனும் பொருளில் பேசுகிறார். கொலோசெயர்கள் மற்றவர்களோடு சம்பந்தப்பட்டிருக்கும்போது ஞானத்தை பிரயோகிக்க வேண்டும். அவர்கள் விசுவாசத்தோடே தேவனிடத்தில் கேட்பதன் மூலம் ஞானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடும் (யாக்கோபு 1:5, 6), மேலும் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தைக் குறித்ததான அறிவினால் நிரப்பப்பட்டிருப்பதாலும் பெற்றுக் கொள்ளக் கூடும் (கொலோசெயர் 1:9).

சில ஜனங்கள் கிறிஸ்தவர்களிடம் சீற்றம் கொண்டு அன்பற்றவர்களாய் நடந்து கொண்டார்கள். "உதாரணமாக, (கிறிஸ்தவர்கள்) கண்ணிற்கு புலப்படுகிற தரிசனமான தேவனை தொழுது கொள்ளாததால், அவர்களை *நாத்திகர்கள்* என்றும், சக்ரவர்த்தியின் (இராயனின்) உருவத்துக்கு முன்பாக தூப வர்க்கம் இடாததால் *நாட்டுப்பற்றற்றவர்கள்* என்றும், அடிக்கடி பூட்டப்பட்ட அறைக்குள் கூடிவர வேண்டிய நிர்பந்தம் இருந்ததால், *ஒழுக்கமற்றவர்கள்* என்றும், அழைக்கப்பட்டார்கள்."[7]

பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, "நீங்களும் யூதருக்கும் கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 10:33). அவர்களுடைய வாழ்க்கை மிக ஜாக்கிரதையான ஒழுங்குமுறைகளையும் ஒழுக்கரீதியிலான அழகையும் கொண்டிருப்பதும் அவசியமானதாயிருந்தது. அவர்கள் "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களும்,

*தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்க வேண்டியதிருந்தது" (பிலிப்பியர் 2:15). அவர்கள் இருள் நிறைந்த உலகிற்கு இயேசுவை தங்கள் மூலம் பிரகாசிக்கச் செய்வதன் மூலம் அவர்களே வெளிச்சமாயிருக்கக் கூடும் (மத்தேயு 5:14-16).*

**"காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (4:5)**

*நடத்தையைக் குறித்து வலியுறுத்தும் பொருட்டு அதை விளக்கும்படி பவுல் சந்தை வெளியில் பயன்படுத்தும் ஒரு வார்த்தையை இரவல் வாங்கினார், பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (exagorazomenoi) என்பது எபேசியர் 5:16லும் இதே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இதன் நேரடிப் பொருளில் "வாங்கும்படி," அல்லது கிடைக்கப் பெறுகிற எல்லாவற்றையும் ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருளை வாங்குவது. இந்த வார்த்தைக்கு மற்றொரு பொருள் "மீட்கப்படுதல்" (கலாத்தியர் 3:13; 4:5).*

*காலத்தைப்* **பிரயோஜனப்படுத்துதல்** *(kairos), அல்லது "நேரம்," என்பதில் சரியான ஒரு நேரத்தை குறிப்பிட்டுச் சொல்லுவதில்லை (கலாத்தியர் 6:9, 10; 1 பேதுரு 5:6), ஆகிலும் அது ஒரு காலக்கட்டத்தைக் குறிப்பதாகும் (1 கொரிந்தியர் 7:5, 29; 2 தீமோத்தேயு 4:3; 1 பேதுரு 1:5). Kairos என்பது "காலங்கள்" (நடபடிகள் 14:17; கலாத்தியர் 4:10) மற்றும் "வேளைகள்" (நடபடிகள் 1:7; 1 தெசலோனிக்கேயர் 5:1), என்றும் மொழிபெயர்க்கப்படலாம், அது சிலவேளைகளில் "காலம்" அல்லது "காலங்கள்" என்று வழக்கமாக காணப்படுகிறது.*

*ஒரு நேரடி மொழிபெயர்ப்பு என்னவெனில், "எல்லா காலங்களையும் தொடர்ந்து வாங்குதல்." மற்றொரு பொருள் "உங்களுக்குள்ள சந்தர்ப்பகாலத்தை அநுகூலப்படுத்திக் கொள்ளுதல்" அல்லது "முழுமையாய் உங்கள் நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல்" என்பன. கிறிஸ்தவர்கள் சும்மாயிருக்கக் கூடாது. மாறாக ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இயேசுவின் சேவைக்கென பெரும்பாலும் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*தடைகள் உண்டாயிருக்கும் நேரங்களில் கூட கொலோசெயர்களை இயேசுவுக்கு சேவை செய்யும்படி பவுல் எதிர்பார்த்தார். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு கஷ்டம் இருக்கத்தான் செய்யும், ஆனால் ஒவ்வொரு கஷ்ட நேரத்திலும் ஒரு சந்தர்ப்பமும் கிடைக்கும். சோர்வடைந்த மனதையுடையோரும் செயல்படுவதில் ஒரு மங்கின சூழலைக் காண்போரும் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*இயேசு எப்போதும் நேரத்தை பயன்படுத்தும் சிந்தையைக் கொண்டிருந்தார். அவர் தமது சீஷர்களிடம், "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது," என்று சொன்னர் (யோவான் 9:4). அவர் எதையும் செய்வதில் அவசரம் காட்டவில்லையென காணப்பட்டாலும், அவர் எப்போதும் பயனுள்ள காரியங்களைச் செயலாற்றுவதில் மும்முரமாக இருந்தார். காலத்தை ஒருபோதும் அவர் வீணாகக் கழித்ததில்லை.*

**"அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு" (4:6)**

பவுல் கவனமான கிறிஸ்தவ தொடர்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். கொலோசெயர்கள் தங்கள் பேச்சுக்களில் சரியான நேரத்தையும், கூட்டத்திற்குத் தகுதியான, சரியான செய்தியைக் கொடுத்தல், கேட்கிறவர்களுக்குள் ஒரு சரியான விளைவை ஏற்படுத்துதல், பேசும் போது விசுவாசத்தோடு கூடிய சத்தியத்தைப் போதித்தல் ஆகியவற்றை மனதில் கொள்ள வேண்டியதிருந்தது. அவர்களுடைய குறிக்கோள்களெல்லாம் சரியான வார்த்தைகளை சரியான நேரத்தில் சரியான ஜனங்களுக்கு சரியான போதனையாகக் கொடுக்க வேண்டும் என்பதாயிருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சுவிசேஷகனல்ல என்ற போதிலும், ஒவ்வொருவரும் ஒரு அர்த்தமுள்ள அமைதிநிறைந்த வழியில் ஒவ்வொரு நிகழ்வுக்கும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பேதுரு "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்று எழுதினார் (1 பேதுரு 3:15). திறமையான சம்பாஷனைகளை மற்றவர்களுடன் செயல்படுத்தும்போது அடுத்தவர்களின் உணர்வுகளையும் விருப்பங்களையும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும், **அறியும்படிக்கு** என்று குறிப்பிட்டதால், நன்கு அறியப்பட்டவார்த்தையாகிய *ginōskō*, என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை, இவ்வார்த்தையின் பொருள் "ஏதோ ஒன்றின் வாயிலாக தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்";[8] மாறாக, *eidenai* (*oida*, என்ற வார்த்தையிலிருந்து), என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார், அதன் பொருள் "அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ளுதல்." கொலோசெயர்கள் கிருபையாகப் பேசும்படி பயிற்சி செய்திருந்தபடியால் ஏற்றுக் கொள்ளப்படும்படி **அவனவனுக்கு உத்தரவு சொல்ல ஏதுவாக** கற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர்.

**"உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" (4:6)**

அடுத்ததாக, பவுல் **பேச்சுக் குறித்த** காரியத்தைப் பேசினார். *Logos*, என்பது பெரும்பாலும் "வார்த்தை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, கொலோசெயரில் இது வேறு பகுதிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது (1:5, 25; 3:16, 17; 4:3). பவுல் இங்கே சுவிசேஷ செய்தியைக் குறிப்பிடவில்லை. மாறாக, தொடர்பை ஏற்படுத்தும் செய்தியை எடுத்துச் செல்லும் வார்த்தையாகிய வாகனத்தை அர்த்தப்படுத்தினார். தேவனுடைய செய்திதொடர்புக்கு சரியான வார்த்தைகள் தேவை.

கிறிஸ்தவர்களின் வார்த்தைகள் **கிருபை பொருந்தினவைகளாய்** (*en chariti*). பேசப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டார். *Charis* எனும் வார்த்தை "நன்றியறிதல்" என பொருள்பட்டாலும் (காண்க 3:16), பவுல் அநேகமாக பேசும் ஷரத்தும் பேசும் விதத்தையுமே மனதிற்கொண்டு பேசியிருக்கக் கூடும். சுவையாகவும் கிருபையினால் நிறைந்ததுமான வார்த்தைகளைப் பேசும்படியும், அவை மிகப்பொருத்தமாக சந்தோஷத்தையளிக்கத்தக்க

வகையில் அமையும்படியும் பேசும்படி கேட்டுக்கொண்டார். அவர்களது வார்த்தைகளின் சாரம்ஸம் சத்தியமாக இருக்கத்தக்கதாக, பேசும்விதம் யாரையும் புண்படுத்தாத தொனியாக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார். கேட்பவர்களின் இருதயத்திற்குப் பேசுவதாக தங்கள் இருதயத்திலிருந்து வருகிற ஏற்புடைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். பவுல் எபேசியர்களுக்கு "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு" என்று அறிவுறுத்தியபோது. இதைத் தமது மனதில் கொண்டிருக்கவேண்டும் (எபேசியர் 4:15).

கேட்கிறவர்களை வருத்தமடையச் செய்யாத முறையில் கொலோசெயர்கள் பேசவேண்டியவர்களாயிருந்தனர். செய்தியினால் சிலர் ஒரு வேளை புண்படுத்தப்படலாம், ஆனால் செய்திகொடுப்பவர் தெரிவு செய்யும் வார்த்தையினால் எவரும் புண்படுத்தப்பட்டு விடக் கூடாது. இந்த சகோதரர்கள், இன்றுள்ள கிறிஸ்தவர்களைப் போல, கடினமான வார்த்தைகள், அசுத்த வார்த்தைகள், கெட்ட வார்த்தைகள், ஆகியவை இல்லாதவார்த்தைகளைப் பேச வேண்டியவர்களாயிருந்தார்கள். அசுத்த வார்த்தைகளுக்குப் பதிலாக, சுத்தமான வார்த்தைகளை அவர்கள் பேச வேண்டியவர்கள், அதினால் அதைக் கேட்பவர்கள் பக்திவிருத்தியடைவார்கள்.

கொலோசெயரின் பேச்சு **உப்பினால்** [*halas*] **சாரமேற்றப்பட்டது போல** [*artuō*] சுவையாகவும், திறமையாகவும் கவர்ச்சிகரமாகவும், ஏற்புடைய ருசியோடும் இருக்க வேண்டுமென்று பவுல் எதிர்பார்த்தார். அவர்கள் கடினமான, உணர்ச்சியற்ற, அல்லது அன்பற்ற பேச்சைப் பேசக் கூடாதவர்களாயிருந்தார்கள். ஒரு சாப்பாட்டிற்கு உப்பு ருசியைக் கொடுப்பதுபோல, கொலோசெயர்கள் சுவையான நறுமணமூட்டும் செயலை அவர்களுடைய பேச்சில் சேர்க்க வேண்டியவர்கள், அதினால் கேட்பவர்களுக்கு அது பிரியமுண்டாகச் செய்யும். H. C. G. Moule பவுலின் விளக்கச் சொற்றொடரை உள்நோக்கிப் பார்க்கச் செய்கிறார், இதில் அவர் உப்பானது பாதுகாக்கும் தன்மையுடையதால் கெட்டுப்போகாமலும் தூய்மையற்றுப்போகாமலும் இருக்கச் செய்கிறது என்றார். "கெட்ட வார்த்தை ஒன்றும் ['தூய்மையற்ற வார்த்தை'; KJV; NKJV] உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" என்று பவுல் எழுதினார் (எபேசியர் 4:29). அவர்களுடைய பேச்சிலே தெளிக்கப்படும் "உப்பு" அவர்களுடைய கிருபையுள்ள வார்த்தைகளிலிருக்கும் அசுத்தங்களையும் தூய்மையற்ற வார்த்தைகளையும் அழித்து அதே வேளையில் மகிழ்ச்சிகரமான "இரட்சகரின்" ஆரோக்கியமான போஷாக்கு மிகுந்த "சிந்தனைக்கான உணவை" மேம்படுத்தும்.[9]

## பயன்பாடு

### இறுதி வியாக்கியானம் (4:2-6)

தனது நிருபத்தை முடிக்குந்தருவாயில், பவுல் இறுதி வடிவமாக கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் உள்ள முக்கியத்துவத்தை தனது பட்டியலில் சேர்க்கிறார். நாம் (1) விழித்திருந்து ஜெபிக்க வேண்டும், (2) சுவிசேஷ

ஊழியத்தை செய்வோரையும் ஜெபத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும், (3) கிறிஸ்தவர்களல்லாதவர்களிடம் முறையாக நடந்து கொள்ள வேண்டும், மற்றும் (4) எப்பொழுதும் பிரயோஜனமான வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும்.

*ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜெபத்தில் விழித்திருங்கள்.* நாம் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, பவுல் தன்னுடைய எல்லா நிருபங்களிலும் எழுதியது போல செயல்பட வேண்டும். இந்த குறுகிய நிருபத்தில் அவர் ஐந்துமுறை, ஆரம்பத்திலும் முடிவிலுமாக, ஜெபத்தைக் குறித்து பேசியிருக்கிறார் (1:3, 9; 4:2, 3, 12).

நமது திட்டமிடுதலில் அநேக முக்கியத்துவமற்ற செயல்பாடுகள் இடம் பெற்று நாம் ஜெபிக்க இயலாதவாறு செய்கிறது. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்களுடைய வாழ்க்கை இன்றைக்குள்ள ஜனங்களின் அமைதி குறைவான வாழ்க்கையைப் போல அநேக பலதரப்பட்ட குழப்பங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. ஒருவகையில் இந்த ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு ஜெபிப்பதற்கென அதிகமான நேரம் இருந்திருக்க வேண்டும், ஆகிலும் அவர்கள் ஜெபிக்கும்படி தங்களை ஒப்புக் கொடுக்க ஊக்கமளிக்க வேண்டியிருந்தது.

ஒப்புக்கொடுத்தல் எனும் போது நமது நேரத்தையும் குறிப்பிடப்பட்ட காரியங்களுக்காக அல்லது செயல்பாட்டிற்காக பிரயாசப்படுவதும் என்று பொருள். நாம் நம்மை விளையாட்டு குழுவுக்காக, தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக, பொழுது போக்குச் செயல்களுக்காக நாம் ஒப்புக் கொடுக்க முடிகிறது. இந்தக் காரியங்களில் நமது நாளை நாம் கழித்தபின், அதனால் மிக அற்பமான சாதனையையே பெறுகிறோம்.

நம்மிலே அநேகருடைய பிரச்சனை என்னவெனில் நாம் ஜெபிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை அடக்கி வைக்கிறோம், அதினால் நமது கவனம் திருப்பப்பட்டு தேவனோடு நமக்குள்ள தொடர்பு தடுக்கப்படும்படி அனுமதிக்கிறோம். இந்தத் தடைகள் ஒருவேளை பிசாசினிடத்திலிருந்து வந்து தேவனோடு நாம் கொண்டிருக்க வேண்டிய விலையேறப் பெற்ற நேரத்தை தவிர்க்கிறதாக இருக்கக்கூடும். நமது ஜெபிக்கும் சந்தர்ப்பங்களை கொள்ளையாடுகிற அந்தக் காரியங்கள் இடைஞ்சலானவைகளாதலால் அவைகளை ஒதுக்கித் தள்ளி விட வேண்டும் (எபிரெயர் 12:1).

சாத்தான் நமக்குத்தடைகளை ஏற்படுத்துவதால் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (1 பேதுரு 5:8). அவனுடைய சோதனைகளுக்கு நம்மிலே யாருமே விதிவிலக்கல்ல, அவன் இயேசுவை சோதித்தான் (மத்தேயு 4:1) பேதுருவை சுளகிலே போட்டு புடைக்கத் தேடினான் (லூக்கா 22:31). தோட்டத்திலே இயேசு பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானிடம் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ..." (மத்தேயு 26:41), என்றார்.

*சுவிசேஷ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.* பவுல் தனக்காக ஜெபிக்கச் சொன்னார். அவர் கேட்காத காரியம் அவர் வேண்டிக் கொண்டதைப் போல முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் தனது கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளிடத்தில் தான் பணத்தை சம்பாதிக்க வேண்டுமென்றோ, ஏற்கும் இருதயங்களுக்காகவோ, அநேகர் (திருமறையை) ஏற்றுக் கொள்ளும்படியாகவோ, அநேகர் மனம்மாறவேண்டுமென்றோ,

சுலபமான ஒரு திட்டமிடல் தேவையென்றோ, கஷ்டங்களிலிருந்து விடுதலை வேண்டுமென்றோ ஐஸ்வரியமும் பிரசித்தியும் பெற்றவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்றோ பெரிதும் கௌரவமும் மிக்க உள்ளூர் சபைகள் இருக்க வேண்டுமென்றோ அல்லது வேறு எந்த சரீரப் பிரகாரமான வசதிகளுக்காகவோ ஜெபிக்கச் சொல்லவில்லை. அவர் கொலோசெயர்களை வசனத்திற்கான வாசல் திறக்கும்படி, கிறிஸ்துவின் இரகசியத்தை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை அளிக்கும்படி, தெளிவாக தைரியமாய் பேச ஏதுவாகும்படி ஜெபிக்கச் சொன்னார். நாம் சுவிசேஷ ஊழியஞ்செய்வோருக்காக ஜெபிக்கும்போது அவரது வேண்டுகோள்கள் நமக்கு ஒரு முன்னுதாரணமாயிருக்கக்கூடும்.

"திறந்த வாசல்" என்று பவுல் குறிப்பிடுவதன் பொருள் வசனத்தைப் பிரசங்கிக்க ஒரு சந்தர்ப்பம் என்பது தான். பவுல் தனது முதல் சுவிசேஷப் பயணத்தை நிறைவு செய்து திரும்பிய போது, "தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும் அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவுகளைத் திறந்ததையும் அறிவித்தார்" (நடபடிகள் 14:27). அவர் இதே உருவகத்தைப் பயன்படுத்தி கொரிந்தியர்களுக்கு எழுதினார். தான் எபேசுவில் இருக்கையில் ஒரு "கதவு" திறக்கப்பட்டதையும் (1 கொரிந்தியர் 16:9), துரோவாவில் ஒரு கதவு திறக்கப்பட்டதையும் (2 கொரிந்தியர் 2:12) குறிப்பிட்டார்.

அவருடைய சுவிசேஷப் பயணத்தின் போது, பெரும்பாலும் கதவுகள் (வாசல்கள்) அடைக்கப்பட்டன, எனவே குறிப்பிட்ட பகுதியில் வசனத்தை பவுல் பிரசங்கிக்க முடியாமல் போயிற்று என்று சொல்லலாம் (நடபடிகள் 13:50; 17:5-10, 13). அவர் யூதர்களைக் குறிப்பிட்டு "புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடை பண்ணுகிறார்கள்" என்றார் (1 தெசலோனிக்கேயர் 2:16). இந்தப்படியாக பவுல் தான் தடைபண்ணப்பட விரும்பவில்லை என்றார், மாறாக சுதந்திரமாக வசனத்தைப் பிரசங்கிக்கவே விரும்பினார்.

*கிறிஸ்தவர்களல்லாதோரிடம் முறையான நடக்கையைக் கொண்டிருங்கள்.* கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையை வாழ்வதிலிருந்து நமக்கு மிகப் பெரிய பலம் கிடைக்கிறது. நாம் பூமிக்கு உப்பாக இருக்கிறோம் (மத்தேயு 5:13), மலையின்மேல் இருக்கிற பட்டணம் போல், உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறோம் (மத்தேயு 5:14), நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களால் வாசிக்கப்படும் நிருபம் நாம் (2 கொரிந்தியர் 3:2). நமது ஜீவியத்தாலும் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பினாலும், எல்லாருக்கும் முன்பாக நாம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் எனக் காட்ட முடியும்.

*நமது பேச்சைக் கேட்பவர்கள் அதினால் பயனடைகிறார்கள் என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.* உப்பு உணவுக்கு சுவை சேர்ப்பது போல, நாம் எப்படிச் சொல்லுகிறோம் என்ன சொல்லுகிறோம் என்பது முக்கியமானது. நாம் அன்பினால் சத்தியத்தைக் கைக் கொண்டு பேச வேண்டும் (எபேசியர் 4:15, 25) மற்றும் சாலொமோனின் ஆலோசனைக்கு செவிசாய்க்க வேண்டும்: "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதிமொழிகள் 15:1).

நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதைக் குறித்துக் கேட்போருக்கு நாம் பதிலளிக்க ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நமது பதில்கள்

"சாந்தத்தோடும் வணக்கத்தோடும்" இருக்க வேண்டும் (1 பேதுரு 3:15). பவுல் எபேசியர்களுக்கு, "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" என்று எழுதினார் (எபேசியர் 4:29).

கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபத்திலே நமது கவனத்தைத் திருப்பவும் கிறிஸ்து விரும்புகிற வாழ்க்கையை நாம் வாழவும் வேண்டும்.

**வெளிச்சத்தைப் போல வாழுங்கள் (4:5, 6)**

*கிறிஸ்தவர்கள் இழந்துபோனவர்களோடு ஞானமாய் செயல்பட வேண்டும்* (வசனம் 5). இருள் நிறைந்த உலகத்தில் நாம் வெளிச்சம் கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும் (பிலிப்பியர் 2:14-16). இழந்து போனவர்கள் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைக் கவனித்துப்பார்த்து, இயேசுவின் வழிகளை அறிந்து கொள்ளக்கூடும்: நமது காரியங்களில் (வியாபாரங்களில்) நியாயமாய் நடந்து, அன்பற்றவர்களுக்கு முன்பாக கிருபையைக் காட்டி, தேவையுடையோருக்கு உதவிகரமாயிருந்து, பேச்சிலே கவனத்தையும், இருதயத்திலே சுத்தத்தையும், நாம் செய்கிற எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்கு ஒப்பாக செயல்படவும் வேண்டும் (காண்க மத்தேயு 5:13-16).

*கிறிஸ்தவர்கள் கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்* (வசனம் 5). மற்றவர்களின் நலன் கருதி வரும் சந்தர்ப்பங்களை மேலோட்டமாக நழுவ விட்டு விடக் கூடாது என்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் கிறிஸ்துவை இழந்தவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ள ஏதுவான வழிகளையும் கண்டு பிடிக்க வகை தேட வேண்டும். பவுல் எல்லாரும் கிறிஸ்துவிடம் வந்தடையத்தக்க சந்தர்ப்பங்களைத் பவுல் தேடினார் (ரோமர் 1:13-15; 1 கொரிந்தியர் 9:19-23; 10:33). யூதர்கள் அவரை கொலை செய்ய தேடினபோதும், அவர் சிதைக்கப்பட்டு இரத்தம் ஒழுக ஒழுக, அவர்களிடம் பேசி கிறிஸ்துவுக்காக அவர்களை ஆதாயப்படுத்த ஏதுவாக பேச அனுமதி கேட்டார் (நடபடிகள் 21:31, 36, 39).

*கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு பதில் அளிக்கும்போது கிருபை நிறைந்த பேச்சுக்களைப் பயன்படுத்த வேண்டும்* (4:6). ஒருவருடைய பேச்சு அவருடைய இருதயத்தில் இருப்பதைக் காட்டிக் கொடுக்கும், அவரது மனதின் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் (மத்தேயு 12:34; 15:18, 19). சரியான வார்த்தைகளையே பேச கிறிஸ்தவர்கள் மேலான காரியங்களையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் (பிலிப்பியர் 4:8). நற்சுவை மிக்க ஞானமான காரியங்களை நாம் பேசுகிறவர்கள் என்று அறியப்பட்டிருக்க வேண்டும், நம்முடைய பேச்சு கேட்பவர்களை கவரக்கூடியவைகளாக இருக்க வேண்டும், ஏனெனில் நமது பேச்சுக்களெல்லாம் அன்பு நிறைந்த இருதயத்திலிருந்து வருபவை (எபேசியர் 4:15).

---

குறிப்புகள்

[1]ரோமர் 12:12; எபேசியர் 6:18; பிலிப்பியர் 4:6; கொலோசெயர் 4:2;

*1 தெசலோனிக்கேயர் 5:17.* [2]*ரோமர் 15:30-32; 2 கொரிந்தியர் 1:11; எபேசியர் 6:19; கொலோசெயர் 4:3; 1 தெசலோனிக்கேயர் 5:25; 2 தெசலோனிக்கேயர் 3:1, 2; பிலேமோன் 22.* [3]*மேலும் காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3: 2, 3; 16:15.* [4]*காண்க 2 கொரிந்தியர் 1:11; எபேசியர் 1:16; பிலிப்பியர் 1:3; 4:6; 1 தெசலோனிக்கேயர் 1:2; 5:17, 18; பிலேமோன் 4.* [5]*இதே வார்த்தை அமைப்பு மத்தேயு 12:29; 13:30; 14:3; 16:19; 18:18; 21:2; 22:13; 27:2; நடபடிகள் 9:2, 14, 21; 12:6; 20:22; 21:11, 13, 33; 22:5, 29; 24:7 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது.* [6]Peter T. O'Brien, *Colossians, Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 240. [7]William Hendriksen, *Exposition of Colossians and Philemon*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 182. [8]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 200. [9]H. C. G. Moule, *The Epistles to the Colossians and to Philemon*, The Cambridge Bible for Schools and Colleges (Cambridge: University Press, 1893; reprint, 1902), 136.